## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

**(e-NIC செயற்திட்டத்திம்)**

## ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்

# விலைமனுக்கோரல் (IFB)

## நாடு முழுவதும் காணப்படும் 340 DS-DRP அலகுகளுக்கான மின் மற்றும் நெட்வொர்க் உட்கட்டமைப்பினை வழங்கல், விநியோகித்தல், நிறுவல் மற்றும் செயற்படுத்தல்

## IFB No: PS/03/PB/PR/05/39/24

1. e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை சார்பாக, அமைச்சின் கொள்முதல் குழுவின் தலைவரினால், இலங்கையில் உள்ள இக்கொள்முதல் மற்றும் நிறுவலுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. இதன் நோக்கமானது

   - 3kVA UPS இன் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல் - 340 எண்ணிக்கை
   - தொழிற்சாலை பயன்பாட்டு மின் விநியோக அலகு வழங்கல் மற்றும் விநியோகம் - 700 எண்ணிக்கை
   - மின் மற்றும் நெட்வொர்க் வயரிங் - 340 அலகுகள்
   - தளபாடங்கள் மற்றும் பிற அலுவலக அமைப்புகளை மீள் ஒழுங்குப்படுத்தல் - 340 அலகுகள்

2. இம் மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.(NCB)

3. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **காரியாலய நேரங்களில் மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 03.00 மணி வரை தலைமை கணக்காளர், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், தொலைபேசி: 011-2887697, (ca@pubsec.gov.lk)** மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், 17 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லையில் நிதிப் பிரிவில் **2024.10.24 ஆம் திகதி** தொடக்கம் **2024.11.13 ஆம் திகதி** வரை **மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 03.00 மணி வரை** மேலும் www.pubsec.gov.lk எமது உத்தியோகபூர்வ இணையத்திலிருந்து மனு ஆவணங்களை எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி பரீட்சித்துக்கொள்ள முடியும். இதன் நோக்கமானது :

4. ஒப்பந்தத்திற்கு தகுதிபெற பின்வரும் குறைந்தபட்ச தகுதிகளை மனுதாரர் பூர்த்தி செய்ய வேண்டியதுடன், கூடுதல் விவரங்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

   a. மனுதாரர் இலங்கையில் **ஐந்து (05)** ஆண்டுகளுக்கு மேல் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

   b. இந்த மனுக்கோரலுக்கு **பணிப்பாளர் குழு மற்றும் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்** உடன் மனு மற்றும் ஏனைய ஆவணங்களுக்கு கையொப்பமிடும் நபருக்கு பொது அதிகார ஆவண அங்கீகாரம் **(POA)** வழங்கப்பட்டிருத்தல் வேண்டும

   c. மனுதாரர் **ISO 9001-2015 (தர மேலாண்மை)** தரச் சான்றிதழைப் பெற்றிருத்**தல் வேண்டும்.**

   d. UPS உற்பத்தியாளர்கள் **ISO 9001-2015 மற்றும் ISO 14001:2015** தரச் சான்றிதழைப் பெற்றிருத்**தல் வேண்டும்.**

   e. தொழில்சாலைக்கான மின் விநியோக அலகு உற்பத்தியாளர் **ISO 9001:2015** சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

   f. மனுதாரர் CIDA - EM 2 அல்லது அதற்கு மேல் சான்றளிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

   g. இக்கோரலில் பங்கேற்கும் மனுதாரர் 1987 **ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ்** பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

   h. மனுதாரர் கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் **(2019/2020-2023/2024)** ஒரே மாதிரியான IT/இலத்திரனியல் தயாரிப்புகளை வழங்கல் மற்றும் நிறுவலில் ஆகியவற்றில் குறைந்தது 03 செயற்திட்டங்களில் பணியாற்றிய அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

   i. மனுதாரர கடந்த 5 ஆண்டுகளில் **(2019/2020-2023/2024)** சராசரி ஆண்டு வருவாயாக குறைந்தது **ரூ.825 மில்லியன்** அல்லது அதற்கு மேலாக இருத்தல் வேண்டும்.

   j. மனுதாரர் குறைந்தபட்சம் **(550 மில்லியன்) நிகர திரவச் சொத்துக்கள்** (தற்போதைய சொத்துக்கள்-சரக்கு-நடப்பு பொறுப்புகள்) அல்லது இந்த திட்டத்திற்கான **கடன் வசதிகளை** வழங்கக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

   k. கடந்த **ஐந்து (05) ஆண்டுகளாக (2019/2020-2023/2024)** நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட **(இலாபம் மற்றும் நஷ்டம் மற்றும் நிதிநிலை அறிக்கைகளின்) சான்றளிக்கப்பட்ட நகல்களை** மனுதாரர் சமர்ப்பிக்க வேண்டும்.

   l. மனுதாரர், வழங்கப்பட்ட தயாரிப்புகளுக்கான அசல் உபகரண உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநராக இருக்க வேண்டும். அதற்கான ஆதாரம் மனுவுடன் அசல் உபகரண உற்பத்தியாளர்களின் தொடர்பு விவரங்கள் மற்றும் பொருந்தினால் அவர்களின் உள்ளூர் முகவர் / விநியோகஸ்தர்களின் தொடர்பு விவரங்களுடன் இணைக்கப்பட வேண்டும். மனுதாரரால் தயாரிக்கப்படாத / வழங்கப்படாத உபகரணங்கள், அசல் உற்பத்தியாளரிடமிருந்து உற்பத்தியாளரின் அங்கீகார கடிதங்கள், UPS , பேட்டரி, கண்காணிப்பு அமைப்பு, பவர் டிஸ்ட்ரிபியூஷன் யூனிட் மற்றும் நெட்வொர்க் பொருட்களுக்கு தனித்தனியாக மனுவுடன் வழங்கப்படல் வேண்டும்.

   m. கோரப்பட்ட UPS பிராண்டுகள் மற்றும் தொழில்துறை வகை மின் விநியோக அலகுகளுக்கான விற்பனைக்குப் பிந்தைய உத்தரவாத ஆதரவு மற்றும் சேவைகளுடன் மனுதாரர் அல்லாத இலங்கையில் காணப்படும் ஒரு உள்ளூர் உற்பத்தி அலுவலகம் அல்லது தனியான அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தராக இருத்தல்.

   n. UPS க்கு மனுதாரர் முன்மொழிந்த பிராண்ட்/தயாரிப்பு குறைந்தபட்சம் இருபத்தைந்து (25) ஆண்டுகள் மற்றும் தொழில்துறை வகை மின் விநியோக அலகுக்கு குறைந்தபட்சம் பத்து (10) ஆண்டுகள் உலகளாவிய சந்தை இருப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   o. தெரிவு செய்யப்படும் மனுதாரரால் நிறுவல், பராமரிப்பு மற்றும் துணை சேவைகளுக்கான **திறமையான தொழில்முறை தொழில்நுட்ப ஊழியர்களைக்** கொண்டிருக்க வேண்டும்.

   p. மனுதாரர் நாடளாவிய ரீதியில் உள்ள DRP அலகுகளுக்கு அல்லது கொள்வனவாளர் கோரும் எந்த இடத்திற்கும் தேவையான தொடர்ச்சியான சேவைகளை (24 மணிநேரமும் 365 நாட்களும்) வழங்கும் திறனைக் கொண்டிருக்க வேண்டும்.

   q. தற்போதைய அல்லது **கடந்த ஐந்து (05) ஆண்டுகளில் (2020-2024)** மனுதாரர் சம்பந்தப்பட்ட, சம்பந்தப்பட்ட தரப்பினர் மற்றும் சர்ச்சைக்குரிய தொகை தொடர்பான ஏதேனும் வழக்கு தொடர்பான தகவல்கள் காணப்படின் அவை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   r. **கடந்த (05) ஐந்து ஆண்டுகளில் (2020-2024)** மனுதாரர் அல்லது அதன் துணை நிறுவனங்கள் அல்லது இணைந்த நிறுவனங்கள் எந்தவொரு அரசாங்க நிறுவனத்தாலும் தடுப்புப்பட்டியலில் இடப்பட்டிருக்கக்கூடாது.

5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2024.10.24** ஆம் திகதியிலிருந்து **2024.11.13** ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூபா.75,000.00** கட்டணத்தை செலுத்தி **கணக்காளர், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், 17 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி பத்தரமுல்லையில்** எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணத்தை காசாக செலுத்துதல் அவசியமாகும்.

6. மனு தொடர்பான முந்தைய கூட்டம் **2024.11.04 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், **17 ஆம் மாடி, ஸ்ரீ சுஹுருபாய, சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை** இடம்பெறும்.

7. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை **இரண்டு பிரதிகளுடன் (அசல் மற்றும் நகல்) 2024.11.14 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்** மனுக்களை அனுப்ப வேண்டும். அல்லது **e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், 17 ஆம் மாடி, ஸ்ரீ சுஹுருபாய, சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். மனுக்கள் **119 நாட்கள்** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியவை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து மனுக்களுடனும் இலங்கையில் செயல்படும் எந்தவொரு உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்படும் **ரூபா.7,500,000/- காப்புறுதிப்பிணையுடன்** இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,**
**17 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

SELACINE MEDIA SOLUTIONS